## இந்தியக் குடியரசு 76:

# மகத்தான வரலாற்றுப் பயணத்தில் ஓங்குமா திராவிடவிய விழுமியங்கள்?


இந்தியக் குடியரசு பாபா சாகேப் அம்பேத்கர் வரைவுக்குழுவுக்கு தலைமையேற்று இறுதி செய்த இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையில் பிறந்து எழுபத்தாறு ஆண்டுகள் ஆகின்றன. உலகிலேயே பெரிய மக்கள் தொகுதி இந்தக் குடியரசில்தான் வாழ்கிறது. எண்ணிக்கை 142 கோடியையும் கடந்து செல்கிறது. அது மட்டுமல்லாமல் உலகிலேயே அதிக பன்மைத்துவம் வாய்ந்த மக்கள் தொகுதியாகவும் இது இருக்கிறது.

எத்தனையோ குறைபாடுகள், பிரச்சினைகள் இருந்தாலும் இவ்வளவு பெரிய மக்கள் தொகுதி மக்களாட்சி நடைமுறைகளை ஏற்றிருப்பதும், மாநிலங்களிலும், ஒன்றியத்திலும் தேர்தல்கள் மூலம் அரசமைக்கப்படுவதும், நீதிமன்றமும், ஊடகங்களும் சுதந்திரமாக இயங்குவதும் சாத்தியமாகியுள்ளது. அதைவிட முக்கியமாக இந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் மிகப்பெரிய சமூக மாற்றம் சாத்தியமாகியுள்ளது.

வர்ண தர்ம சிந்தனையால் நிலைபெற்றிருந்த ஜாதீய ஏற்றத்தாழ்வுகளை மீறி இன்று பல்வேறு மக்கள் தொகுதிகளும் ஆட்சியிலும், அதிகாரத்திலும் பங்கெடுப்பது சாத்தியமாகியுள்ளதுடன், அந்த பங்கேற்பின் அளவின் போதாமையைச் சுட்டிக்காட்டி மக்களாட்சி முரண்களம் தொடர்ந்து கட்டமைக்கப்படுவது நம்பிக்கையூட்டுகிறது.

உலகில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில், 16 நாடுகளே பத்து கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டவை. அந்த வகையில் இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலான உலக நாடுகளைவிட அதிக மக்கள் தொகை கொண்டவை. இப்படியிருக்கும்போது, உலகின் பல்வேறு நாடுகளிலும் அரசியல் அமைப்பு எழுபத்தைந்து ஆண்டுக்காலம் நிலையானதாக இல்லை. பல நாடுகளிலும் குழப்பங்கள் மிகுந்து ராணுவ ஆட்சி பொறுப்பேற்பதையும், பொருளாதாரம் முழுமையாக சீர்குலைவதையும் காண்கிறோம். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடுகளிலும் பெரும் இனப்படுகொலைகள், கொடூரமான அழிவுச் செயல்கள், இதே காலகட்டத்தில் அரங்கேறியுள்ளன.

முழுமையாக அனைத்து நாடுகளின் எழுபத்தைந்து ஆண்டுக்கால அரசியல் வரலாற்றை ஒப்பிட்டு நோக்கினால் இந்திய குடியரசின் வரலாற்றுப் பயணம் சிறப்பாகவே அமைந்திருப்பதைக் காணலாம். புத்தரையும், வள்ளுவரையும், கபீரையும் உருவாக்கிய பண்பாட்டுச் செறிவு ஒரு காரணமென்றால், அந்த பண்பாட்டுப் புலத்தில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டமும் முக்கிய காரணம் எனலாம். நூற்றுக்கும் அதிகமான திருத்தங்கள் செய்யப்பட்டாலும் இந்திய அரசியலமைப்பு சட்டம் ஓர் உயிர்ப்புள்ள அடித்தளமாக குடியரசை தாங்கி நிற்கிறது.




இந்தியாவில் தோன்றிய பல பேரரசுகள் இருநூறு ஆண்டுக்காலம், முந்நூறு ஆண்டுக்காலம் தொடர்ந்துள்ளன என்பதைக் காணும்போது எழுபத்தைந்து ஆண்டுகள் என்பது கணிசமானதல்ல. ஆனால், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும், ஊடகப் பெருக்கமும் முன்னெப்போதும் இல்லாத அளவு, எந்த காலத்திலும் நினைத்துக்கூட பார்த்திராத அளவு சமூகத்தை ஒருங்கிணைத்துள்ளன. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 80% மக்களுக்கு எழுத்தறிவில்லாத நிலையில் உருவான குடியரசு இன்று பெரும்பாலான மக்களுக்குக் கல்வியறிவை சாத்தியமாக்கியுள்ளதுடன், பல்வேறு துறைகளில் மேற்கத்திய நாடுகளுக்கு இணையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

**அந்த விதத்தில் இந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் ஒரு புதிய பிரம்மாண்டமான, மிகுந்த பன்மைத்துவம்**




**கொண்ட மக்கள் தொகுதியை இந்தியக் குடியரசு உருவாக்கியுள்ளது எனலாம். சமூக வன்முறைகளும், வன்செயல்களும் கணிசமாக நிகழ்ந்தாலும், முன்னெப்போதும் இல்லாத அளவு சமூக ஒருங்கிணைப்பும் நிகழ்ந்துள்ளதை மறந்துவிடக் கூடாது.**

**இவ்வாறு இந்தியக் குடியரசைப் பாராட்டி மகிழும் இந்த நேரத்தில், சில முக்கியமான பலவீனங்களையும் நாம் கணக்கில் கொள்ளாமல் இருக்க முடியாது. அந்த விதத்தில் இந்தியக் குடியரசு சந்திக்கும் மூன்று முக்கிய பிரச்சினைகளை பரிசீலிக்கலாம் என்று தோன்றுகிறது. இவை மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையும்கூட. ஒன்று, தொடரும் வர்ணஜாதி கருத்தியல்; இரண்டு, வலுவற்ற குடிமைச் சமூகம்; மூன்று, வளர்ச்சிக்குப் பலியாகும் வாழ்வாதாரச் சூழலியல்.**

### தொடரும் வர்ணஜாதி கருத்தியல்

ஒரு சுதந்திரவாத மக்களாட்சிக் குடியரசில் மக்களை குறிப்பிட்ட கலாச்சார அடையாளத்தைத் தவிர்க்கும்படி கட்டாயப்படுத்தக் கூடாது என்பது ஒரு கோட்பாடு. பொதுவாழ்வில் அனைவரும் சமம் என்று கூறலாமே தவிர, தனி வாழ்வில் அவர்கள்

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி*



ஜாதி அடையாளத்தைப் பேணுவதை இந்தியக் குடியரசு தடை செய்யவில்லை. அதனால் பெருமளவும் ஜாதி சார்ந்த அகமணமுறை இந்தியா முழுவதும் தொடர்கிறது. அத்துடன் சேர்ந்து பழைய ஜாதீய ஏற்றத்தாழ்வுகள் புதிய வடிவம் எடுக்கின்றன. உதாரணமாக அரசு அலுவலகங்களில் உயரதிகாரிகளை Class I என்றும், இடைநிலை அதிகாரிகளை Class II என்றும், எழுத்தர்களை Class III என்றும், உதவிப் பணியாளர்களை Class IV என்றும் கூறுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இந்த ஒவ்வொரு வகுப்பிலும் யார் பணியாற்றுகிறார்கள் என்பது வர்ண சமூகப் படிநிலையை ஒத்ததாக இருந்தால் வியப்பதற்கில்லை. இட ஒதுக்கீட்டின் காரணமாக சிறிது கலந்திருக்குமே தவிர, பெரும்பான்மை எண்ணிக்கையைப் புள்ளி விவரப்படி பார்த்தால் எப்படி வர்ண, ஜாதி படிநிலை தொடர்கிறது என்பதைக் காணாமல் இருக்க முடியாது.

ஜாதி மறுப்புத் திருமணங்களே நடக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அது பொதுவழக்காக மாறவில்லை. மாற வேண்டும் என்றுகூட பெரிதாக வலியுறுத்தப்படுவதில்லை. தமிழ்நாட்டில் மட்டும்தான் பெயரில் ஜாதி பின்னொட்டைப் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது. பிற மாநிலங்களில் எந்த கூச்சமும் இல்லாமல் ஜாதி பின்னொட்டுகளை மிக முற்போக்கான கல்வியாளர்கள், சிந்தனையாளர்களே பயன்படுத்துகிறார்கள். பொது வாழ்வில் எல்லோரும் சமம்தான் என்பதால் இதில் பிழையில்லை என்று நினைக்கிறார்கள். மற்றொருபுறம் வெறும் பெயரில் என்ன இருக்கிறது; பெயரை மறைத்துவிட்டால் ஜாதி மறைந்துவிடுமா என்று கேட்கிறார்கள். ஆனால், ஆதிக்க ஜாதியினரைப் போல, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பலரால் அவர்கள் ஜாதிப் பெயரை பயன்படுத்த இயலாமலும் இருக்கிறது. இது குறித்தெல்லாம் அரசியல்வாதிகளோ, பிற குடிமைச் சமூக உறுப்பினர்களோ கவலைப்படுவதில்லை. பெயரை வைத்துக்கொள்வதே ஜாதியின் இருப்பைத் தக்கவைப்பதுதானே? அதனால் ஜாதி குடிமைச் சமூக விழுமியங்களுக்கு எதிரானதாகப் பார்க்கப்படுவதில்லை.

வட நாட்டின் பல பகுதிகளில், இந்து - முஸ்லிம் சமூக அடையாளங்களிடையே பல்வேறு சூழ்நிலைகளில் முரண் கட்டமைக்கப்பட்டதால், தமிழகம் போல பார்ப்பனீய ஜாதீய எதிர்ப்புச் சொல்லாடல் வலுவடையவில்லை. பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோரின் அரசியல் பங்கேற்பும் தமிழ்நாட்டினைப் போல முன்னோடித் தன்மையுடன் நிகழவில்லை. இதன் காரணமாகத்தான் அரசியலமைப்பு சட்ட விழுமியங்களுக்கு முற்றிலும் புறம்பாக ஆதிக்க ஜாதி ஏழைகளுக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கும் அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தம் நிகழ்ந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் சில தமிழ்நாட்டுக் கட்சிகள் தவிர பெரும்பாலான அரசியல் கட்சிகள் எதிர்க்க முன்வரவில்லை. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இப்போது பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 10% இட ஒதுக்கீடு செய்யலாம், ஆனால் அதில் அனைத்து ஜாதியினரும் இடம்பெற வேண்டும் என்று கூறியிருப்பது சரியான தீர்வில்லை என்றாலும் ஓரளவு நம்பிக்கையளிக்கிறது. அதே போல அவரும், இந்தியா கூட்டணியும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஜாதியைச் சேர்க்க வேண்டும் என்று கூறுவதும் தொடர்ந்து நிலவும் ஏற்றத்தாழ்வைப் புரிந்துகொள்ளவும், களையவும் உதவக்கூடும்.

**அதே போல தந்தை பெரியார் வலியுறுத்தியபடி இந்து மத ஆலயங்களில் பார்ப்பனர்களுக்கு அளிக்கப்படும் வர்ண அடிப்படையிலான தனித்துவ உரிமைகள் ரத்து செய்யப்படுவதுடன், அனைத்து ஜாதியினரும் கோயில்களில் வழிபாடுகளை செய்யும் பணிக்கு அமர்த்தப்படுவது மிகவும் அவசியம். ஏனெனில் கோயில்கள் மிக முக்கியமான பொது நிறுவனங்கள்; அரசர்களால் உருவாக்கப்பட்ட பொது நிறுவனங்கள். அவற்றில் மரபின் பெயரில் பார்ப்பன தனியுரிமைகள் தொடர்வது வர்ணஜாதி கருத்தியலைப் பாதுகாப்பதேயாகும். ஆனால், இது குறித்தெல்லாம் முற்போக்கான சிந்தனைகள் பொது மன்றத்தில் முன்னெடுக்கப்படுவது அரிதாகவே இருக்கிறது என்பதால் ஏதோவொரு வகையில் வர்ணஜாதி கருத்தியல் இந்தக் குடியரசில் தொடரவே செய்கிறது. இந்த ஆரியப் பண்பாட்டு அடிப்படை களையப்பட்டு திராவிடவிய சமதர்ம சிந்தனை குடியரசின் விழுமியமாவது இன்றியமையாததாகும்.**



### பலவீனமான குடிமைச் சமூகம்

ஒரு குடியரசு சிறப்பாக இயங்க வலுவான குடிமைச் சமூக அமைப்புகள் இன்றியமையாதவை. அரசு தவறு செய்தால் குடிமைச் சமூக அமைப்புகள் தட்டிக்கேட்க வேண்டும். அரசு சேவைகளைப் பெறுபவர்கள், நுகர்வோர், குடியுரிமைப் பாதுகாப்பு அமைப்புகள், மனித உரிமைகள் அமைப்புகள் ஆகியவை எல்லாம் பொதுமன்றத்தில் விமர்சனங்களை முன்வைப்பதும், ஆட்சி செய்பவர்கள் அந்த விமர்சனங்களைச் செவிமடுப்பதும் முக்கியம். இது போன்ற நடைமுறைகள் மிகவும் பலவீனமாகவே உள்ளன. இதனால் பல்வேறு மட்டங்களிலும் எதேச்சதிகாரப் போக்கு நிலவுகிறது. உதாரணமாக ரயில் விபத்துகளை எடுத்துக்கொள்வோம். அவை நடக்கும்போது பல்வேறு அமைப்பினரும் நிர்வாகச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால், அரசு பல்வேறு காரணங்களால் மெத்தனமாகவே இருக்கிறது. மீண்டும் விபத்து நடக்கிறது. ஒரு வலுவான ரயில் பயணிகள் சங்கம் உருவாகி ரயில்வே நிர்வாகத்துடன் தொடர்ந்து உரையாடி, விமர்சனங்களை பொதுமன்றத்தில் வைத்து நிர்வாகத்தைச் சீர்செய்வது என்பது சாத்தியமாவதில்லை.

அதேபோல உயர் கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் பல பல்கலைக்கழக நிர்வாகங்கள் கடுமையான எதேச்சதிகாரப் போக்கில் செயல்படுவதைக் காண முடிகிறது. ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. தொழில், வர்த்தகம், ஒப்பந்தப் பணிகள் போன்றவற்றில் அரசியல்வாதிகள் லாபத்தில் பங்கு கேட்பதைக்கூட பழைய நிலப்பிரபுத்துவத்தில் வரியை பகிர்ந்துகொள்வதுபோல என்று நினைத்துக் கொள்ளலாம். ஆங்கிலத்தில் Rent seeking என்று அழைப்பார்கள். ஆனால், உயர் கல்வித்துறையில் ஓர் ஆய்வை நிறைவு செய்ய, ஆசிரியப் பணியைப் பெறுவதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் என்ற நிலை நிலவுவது மிகப்பெரிய சீர்கேடாக உள்ளது. இதன் காரணமாக ஹியுமானிட்டீஸ், சோஷியல் சைன்ஸ் எனப்படும் அறிவுத்துறைகளின் தரம் நாடெங்கும் வெகுவாகத் தாழ்ந்து காணப்படுகிறது. இவை தவிர தாறுமாறான அரசியல் தலையீடுகளும் பல்வேறு நிறுவனங்களில் நடக்கிறது. இது போன்ற சூழல் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கும் என்றாலும், இதையெல்லாம் குறித்து அரசிடம் கேள்வி எழுப்பவல்ல குடிமைச் சமூக அமைப்புகள் என்று எதுவும் இல்லை.

### வளர்ச்சிக்குப் பலியாகும் வாழ்வாதாரச் சூழலியல்

**இந்தியா வெகு வேகமாக நகர்மயமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால், நகரங்களை வடிவமைப்பது, அவற்றின் சூழலியல் பாதுகாப்பு, கழிவுகளை அகற்றுவது உள்ளிட்ட பல அம்சங்கள் மிகவும் கவலைக்குரிய அளவிலேயே உள்ளன. சமீபகாலமாக அதிகரித்து வரும் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ள மாநில அரசுகள் திணறிப்போகின்றன. ஒன்றிய அரசின் பங்களிப்பு குறித்த நெறிமுறைகள் தெளிவற்று இருக்கின்றன. ஒன்றிய அரசு என்பது ஏதோ பேரரசு போலவும், மாநில அரசுகள் உதவிக் கேட்டு நிற்கும் சிற்றரசுகள் போலவும் காணப்படுவது குடியரசு விழுமியங்களைக் கேலிக்குள்ளாக்குகிறது. ஒன்றிய அரசிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது பாதுகாப்பான வளர்ச்சியைச் சாத்தியமாக்க இன்றியமையாதது.**

நகரங்கள், சிறு நகரங்களில் துப்புரவுப் பணி என்பது இன்னமும் ஜாதீயத்தின் வெளிப்பாடாகவே இருக்கிறது. பெரும்பாலும் வறியவர்களான தாழ்த்தப்பட்ட, விளிம்புநிலை சமூகத்தினரே துப்புரவுப் பணியாளர்களாக இருப்பதால் அவர்களுக்கான ஊதியம் மிகவும் குறைவாக இருப்பதுடன், அவர்களுக்கான பாதுகாப்பான சீருடைகள், நவீன துப்புரவுக் கருவிகள் வழங்கப்படுவதில்லை. துப்புரவுத் தொழிலாளர்கள் பணி ஒட்டுமொத்த சமூகத்திற்கும் இன்றியமையாதது ஆனாலும், பெரும் தனவந்தர்களும் சரி, மத்திய தர வர்க்கத்தினரும் சரி துப்புரவுப் பணியாளர்களைக் குறித்து எந்தவித அக்கறையும் கொள்வதில்லை. இவர்கள் பல இடங்களில் உள்ளூராட்சி அமைப்புகளால் பணியமர்த்தப்படுவதால், இவர்களை மாநில அளவிலோ, தேசிய அளவிலோ ஒருங்கிணைப்பதும் கடினம். பெஜாவாடா, வில்சன் போன்றவர்கள் இவர்களுக்காகப் பல்வேறு மட்டங்களில் குரல் கொடுத்து வந்தாலும், ஒட்டுமொத்த சமூகத்தின் ஜாதீய மனம் துப்புரவுப் பணியாளர்கள் குறித்து தீவிரமாகக் கவலை கொள்ள மறுக்கிறது.

சூழலியல் சீர்கேடு என்பதன் முக்கிய பிரச்சினை என்னவென்றால் அது அடித்தட்டு மக்களைத்தான் பெருமளவு பாதிக்கும். ஆனால், வளர்ச்சி அரசியலால் தங்கள் வாழ்வாதாரம் மேம்படும் என்று நினைக்கும் அவர்கள் சூழலியல் பாதிப்பு குறித்து அறிய முடியாமல் உள்ளனர். உதாரணமாக, நிலத்தடி நீரின் நிலை என்ன, நதிப்படுகைகள் எவ்வாறு மணல் எடுப்பதால் பாதிக்கப்படுகின்றன என்பது போன்ற முக்கியமான பிரச்சினைகள் குடிமைச் சமூகத்தின் கவனத்திற்கு அப்பாற்பட்டதாகவே உள்ளன. அதிலும், இந்திய மொழிகளில் இயங்கும் ஊடகங்கள் ஆய்வுக் கட்டுரைகளுக்கோ, அறிவுபூர்வமான விவாதங்களுக்கோ அதிகம் இடமளிப்பதில்லை. அவை வெகுஜன ஆர்வமுள்ள அம்சங்களுக்கே முதன்மை தருகின்றன. அதனால் குடிமைச் சமூகம் என்பதே ஆங்கில மொழி சார்ந்ததாகவே உள்ளது இந்தியக் குடியரசின் மிகப்பெரிய பலவீனமாகும். மாநில மொழிகளில் குடிமைச் சமூக சொல்லாடல்கள் வலுப்பெற்றால்தான் மாநில சுயாட்சி என்பதும் முழுமையாக சாத்தியமாகும். மாநிலங்கள் அதிக அதிகாரம் பெறுவதற்கு தேர்தல் அரசியல் பாதை மட்டுமே போதாது; மாநில மொழி குடிமைச் சமூக சொல்லாடல்கள் வலுப்பெறுவதும் அவசியம். ஆனால், மாநில மொழி ஊடகங்கள் வர்த்தக நலன் என்ற குறுகிய நோக்கில் பொதுமன்ற சொல்லாடலை வளப்படுத்த மறுக்கின்றன. இது இந்திய குடியரசு சந்திக்கும் மிகப் பெரிய சவால் என்றே தோன்றுகிறது.

இந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் மக்களாட்சி என்ற வழிமுறை கணிசமாக வேரூன்றியுள்ளது. ஆனால், குடிமைச் சமூக விழுமியங்கள் குடியரசை பலப்படுத்தத் தவறினால், அது தேர்தல் எதேச்சதிகாரமாக (Electoral despotism) தேங்கிவிடும் ஆபத்தினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்